## அன்பின் வாசக நெஞ்சங்களே!

இம்மாதம் அன்னை மரியாளின் செபமாலை மாதம். இம் மாதம் மறைத்தளத்தில் ஒவ்வொரு நாளும் செபமாலைத் தியானமும், திருப்பலியும் இடம்பெறுகின்றது. தூயமரியாளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட மாதம். ஆகவே நாமும் ஒவ்வொரு நாளும் செபமாலை தியானத்தில் ஒரேகுடும்பமாக சொல்லுகின்ற போது உண்மையான, அருளும்,நிறைவான ஆசீரும் எமக்கும், எமது குடும்பங்களுக்கும் கிடைக்கும். உலகத்தின் போக்குகள், சிந்தனைகள் செயற்பாடுகள் எல்லாம் தனி மனித வளர்ச்சிக்காகவும், மனிதன்தான் எல்லாவற்றிறிகும் மேலானவன் என்றும், மனித அறிவே எல்லாவற்றிலும் வல்லமை உள்ளது என்ற கொள்கையையும், சிந்தனைகளையும் வளர்த்துக்கொண்டு வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. கடவுள் இல்லை என்ற சிந்தனைகளும் வளர்ந்து கொண்டு வருவதை உணரக்கூடியதாக இருக்கின்றது, அதனால் நாடுகளுக்கிடையில் சண்டைகள், மதங்களுக்கிடையில் வன்முறைகள், இனங்களுக்கிடையில் சண்டை சச்சரவுகள் மொழிகளுக்கிடையில் வன்முறைகள் உருவாகி இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. அந்த சண்டைகள், போரினால் அழிவுகள் அதிகரித்துக் கொண்டு போவதை உணர முடிகின்றது. இன்னும் மனித அழிவுகள் அதிகரிக்கின்றது. வறுமையினால் அதிக மக்கள் இறந்து கொண்டிருப்பதையும், இன்று மக்கள் இன்னும் அகதிகாளாக்கப் படுவதையும் தொலைத் தொடர்புகளினூடாக காணக்கூடியதாய் இருக்கின்றது. அதிகாரப்போக்கு, கடவுள் இல்லை என்ற மமதை, ஆணவப்போக்கு, சுயநலப்போக்கு இவற்றினால் மக்கள் அலைந்து சின்னாபின்னமாக எதிரிகளாக அலைந்து திரிவதைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. அமெரிக்காவில் ஏற்பட்ட இயற்கையின் அழிவினால் பல இலட்சம் மக்கள் கஷ்டங்களை அனுபவிப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. சூறாவளியும், பெருவெள்ளமும் மக்களின் இருப்பிடங்களையும், வழமையான வாழ்க்கை முறை ஸ்தம்பிதம் அடைந்துள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது. பல மில்லியன் கணக்கிலே அழிவுகள் கணக்கிடப்படடிருக்கின்றன. மனித அழிவுகள் அதிகரித்துக் கொண்டு போவதைக் காணக்கூடியதாக உள்ளது. இயற்கை அழிவுகள் ஒருபுறம், செயற்கை அழிவுகள் மறுபுறம். இடம்பெற்றுக்கொண்டு போவதை உணரக்கூடியதாக இருக்கின்றது. மனித குலத்தையே இவ்வழிவுகள் ஆட்டிப்படைத்துக் கொண்டே இருக்கின்றது. ஏன் இந்த அழிவுகள்? இதற்கான காரணம் என்ன? என்பதை அலசி ஆராய்ந்து பார்த்தால் “100 வருடத்திற்கு முதல் பத்திமாவில் மரியன்னை கொடுத்த செய்தி இப்பவும் அதே அன்னை எங்களுக்குத் தருகின்றார். அதாவது “உன் இறைவன் மீட்பரை நோகப்பண்ண வேண்டாம், காயப்படுத்த வேண்டாம்” உனக்காக பாடுகள் பட்டு மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்த ஆண்டவர் மீட்பரை மீண்டும் காயகப்படுத்தக்கூடாது. இந்தக் காயப்படுத்துதல் கடவுளுக்கும், இறைவனுக்கும் அயலவருக்கும் எதிராக செய்யும் பாவங்களே ஆகும். இப்படியான பாவங்களை மீண்டும், மீண்டும். செய்யும் போது இறைமகன் இயேசுவை, என் மகன் இயேசுவை நோகடிக்கின்றீர்கள் அன்று மரியாள் கொடுத்த செய்தியாக இருக்கின்றது. இப்படியான அழிவுகளுக்கு இதுவே காரணம் என்பதை பத்திமா பதியிலே கூறியிருக்கின்றார். எனவே இம்மாதம் செபமாலை மாதமாக இருக்கின்றபடியால் சிறப்பான வேண்டுதல்கள். விண்ணப்பங்களை மரியாளுடாக மன்றாடும் போது மிகச்சிறப்பாகவும், விசேடமாகவும் இறைவனிடத்தில் கொண்டுசெல்லப்படும். இம் மன்றாட்டுக்கள் கட்டாயம் கேட்கப்படும்.

### சிறப்பான கருத்துக்களாக

- **ஒவ்வொரு குடும்பங்களுக்காகவும்,**
- **எமது பங்கிற்காகவும் - அதன் வளர்ச்சிக்காகவும்,**
- **எமது தாயக்தின் மக்களிற்காகவும் - நாட்டிற்காகவும் - அதன் ஒற்றுமைக்காகவும்,**
- **இயற்கை, செயற்கை அழிவினால் கஸ்டப்படும் ஒவ்வொரு நாட்டிற்காகவும்,**
- **திருச்சபைக்காகவும் - அதன் வளர்ச்சிக்காகவும்,**

ஒவ்வொரு காரணிக்கத்திலும் செபித்து மரியன்னையின் பரிந்தை வேண்டிக்கொள்வோம்.

**“அருள் நிறைந்த மரியே வாழ்க”””**

நன்றி

அன்புடன்,
அருட்பணி யூட் நிக்ஸன்
*Parish Priest*
*Our Lady of Deliverance Tamil Catholic Mission*
*Montreal (QC), Canada*